தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

(முற்பகல் 11–50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஏ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1981-82 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே 1981–82 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் மேல் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது. அந்த மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் விவர அறிக்கையை இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு, 1981–82 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்தபோது, சில மானியங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேல் மிகைச் செலவு செய்யப் பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச் செல விற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1981–82 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக ஒதுக்கப்பட்ட நிதி